வடதலைக்குளம் கிராம மருத்துவமனை.

*வினா எண். 17—திரு. ஏ. ராமலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், புவனகிரி ஒன்றியம், வடதலைக்குளம் கிராமத்தில் மருத்துவமனை துவக்கப்பட்டு செயல்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த மருத்துவமனை மீண்டும் செயல்பட அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: (அ) ஆம்.

(ஆ) மருந்தகம் திறப்பதற்காக ஏற்கனவே வெளியிடப் பட்ட ஆணைகளை புதுப்பித்தும், ஒரு மருத்துவ அலுவலர் பதவியை ஏற்படுத்தியும் மருந்தகத்திற்குத் தேவையான மற்ற பணியாளர்களை நியமிக்க இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணை 1979ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் நாள் அன்று பிறப்பித்துள்ளது.

திரு. ஏ. ராமலிங்கம்: அந்தப் பகுதி மக்கள் மருத்துவ மனையின்றி அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசு மருத்துவ மனையை செயல் படுத்த நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: மக்களுடைய நலன் கருதித்தான் மருத்துவமனையை நடத்துவதற்கு ஆணை 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மங்கநல்லூர் அரசு மருத்துவமனைக் கட்டடம்

வினா எண். 18—திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குத்தாலம் தொகுதி மங்கநல்லூர் அரசு மருத்துவ மனைக்குச் சொந்த கட்டடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில் எப்போது கட்டடம் கட்டப்படும் ?

1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்தரராஜன் :—(அ) ஆம்.

(ஆ) இம் மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு 1979–80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதித் திட்டப்பணி செயற்குறிப்பில் சேர்க்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, இந்த மங்கநல்லூர் மருத்துவ மனை கட்டுவதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. பொதுமக்கள் பங்குத் தொகை 4 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அரசாங்கக் கணக்கில் கட்டப்பட்டது. இருந்தும் இந்தக் கட்டிடம் கட்ட காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மங்கநல்லூரில் அரசு மருந்தகம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஒன்று திட்டப்பட்டு அதற்காக மக்கள் நன்கொடையாக ரூ. 36,000 வழங்கியிருக்கிறார்கள். குத்தாலம் ஒன்றியம் ரூ. 50,000 தருவதாக வாக்களித்து, ஆனால் 1976 ஆம் ஆண்டு வரையிலே அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தரப்படாத காரணத்தால், அது நிறுத்தி வைக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, இப்பொழுது புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இந்த 1979–80 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப்பட்டு அது செயற்படுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அந்த மருத்துவ மனை தற்பொழுது ஒரு தனியார் கட்டிடத்திலே இயங்கி வருகிறது. ஆகவே, அவசியத்தை முன்னிட்டு இந்த ஆண்டாவது அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, திரு. முகமது இப்ராஹிம் என்பவர் வாடகை இல்லாமல் மருத்துவ மனை நடத்துவதற்குக் கட்டிடத்தைத் தந்திருக்கிறார்கள். மருந்தகம் தனிக் கட்டிடத்தில் இயங்குகிற வரையில் அந்தக் கட்டிடத்திலேயே இயங்கலாம் என்று அவர்கள் தந்திருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான வரைபடம் எதிர்பார்க்கப்படுகிறது. அது வந்தவுடன் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப் படும்.